# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.No.33 of 2022 | **PW - 2** | : | Cross |
| **Name** | சிவக்குமார் | **Father Name** | : | துரைசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 28.04.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் -12.23 PM**

**குறுக்கு விசாரணை:**

சண்முகம் எனக்கு என்ன உறவு என்றால் மாமன் மச்சான் உறவு முறை. சின்னசாமிக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் என்றால் 15 ஏக்கர் இருக்கும். அவர் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தும் போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. எந்த வருடம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை ஏக்கர் நிலத்திற்கு அந்த பாகப்பத்திரம் செய்யப்பட்டது என்றால் சுமார் பத்து ஏக்கர் இருக்கும் என்று நினைக்கிறேன். வரதம்மாள் என்பவர் சின்னசாமியின் மகள். அவருக்கு சின்னசாமி சொத்து ஏதாவது கொடுத்தாரா என்றால் எழுதி வைத்துள்ளதாக கூறினார்கள் எத்தனை ஏக்கர் என்றால் சுமார் 3 ¼ ஏக்கர். அது எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்றால் 4, 5 ஆண்டுகள் ஆகும். அது பாகப்பிரிவினைக்கு முன்பா அல்லது பின்பா என்றால் பாகப்பிரிவனைக்கு பின்பு தான். அவ்வாறு எழுதும்போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. வரதம்மாளுக்கு எழுதிய சொத்தை வரதம்மாள்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை சண்முகம் தான் அனுபவம் செய்கிறார். வரதம்மாளுக்கு எழுதுவதற்கு முன்பு அதை யார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சண்முகம் தான் அனுபவம் செய்துவந்தார். எழுதும்போது அதை சின்னசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது தவறு வரதம்மாளுக்கு எழுதிய சொத்தை இன்றளவும் வரதம்மாள்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல சண்முகம் தான் அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்திற்கு சர்வே எண் விஸ்தீரணம் செக்குப்பந்தி தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது சுமார் மூன்று ஏக்கர் இருக்கும் அதன் அருகாமையில் உள்ளவர்கள் பெயர் தெரியும் ஆவணத்தின்படி உள்ள செக்குப்பந்தி என்னவென்று தெரியவில்லை. வடக்கு புறம் வேங்கையா கவுண்டர் நிலம் கிழக்கு சிதம்பரம் நிலம்

மேற்கு கோவிந்தசாமி நிலம் தெற்கும் கோவிந்தசாமி நிலம். எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தை எனது நிலத்திற்கு பக்கத்து நிலம் என்று சொல்லி உள்ளது பொய்யானது என்றால் தாவா சொத்தை ஒட்டியது போல் இல்லை மூன்றாவது நிலமாக உள்ளது. சின்னசாமிக்கு பாத்தியப்பட்ட நிலம் எவ்வாறு பாகப்பிரிவினை செய்யப்பட்டது வரதம்மாளுக்கு எவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்டது என்று தெரியாமல் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியில்லை. அவர்களுக்கு பிரிக்கப்பட்ட நிலத்தில் முழு விவரமும் எனக்கு தெரியாது அந்த ஆவணம் எழுதிய போது நான் செல்லவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழி பிரச்சனை இருந்து வந்ததாக சொல்லி உள்ளேன் ஆவணம் ஏற்படுத்தியதில் இருந்து எவ்வளவு நாள் கழித்து அந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சுமார் ஆறு மாதம் கழித்து. அவ்வாறு வழி பிரச்சனை ஏற்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது.ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்ட போது நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொண்டேன் யார் யார் முன்னிருந்து பேசினார்கள் என்றால் ஊர் பெரியவர்கள் பேசினார்கள் அவர்கள் பெயர் என்னவென்றால் முருகன் ஆறுமுகம் மேலும் அவர்களின் பங்காளிகள், மாமன் மச்சான்கள் 10 பேர் பேசினார்கள். சின்னசாமி வரதம்மாளுக்கு ஆவணம் ஏற்படுத்தி எவ்வளவு நாட்களுக்கு பின்பு அவ்வாறு பேசப்பட்டது என்றால் சுமார் ஆறு மாதம் கழித்து வரதம்மாள் சண்முகத்தை தடுத்தபோது அவ்வாறு பேசப்பட்டது. சின்னசாமி குடும்பத்தின் முழு விவரமும் தெரியாமல் அவர் சொத்து கொடுத்து அவர் ஏற்படுத்தி வைத்த ஆவணங்கள் குறித்து தெரியாமல் சண்முகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழிபாத்தியம் கேட்டு தான் சண்முகம் ஊரில் பஞ்சாயத்து கூட்டினாரா என்றால் ஆமாம்.அப்போது சின்னசாமி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. சின்னசாமி இறந்து எவ்வளவு நாள் கழித்து மேற்படி பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் அவர் இறப்பிற்கு முன்பா பின்பா என்று எனக்கு சரியாக நினைவில்லை. ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்ட போது சின்னசாமி அந்த பஞ்சாயத்தில் கலந்து கொண்டாரா என்றால் கலந்து கொண்டார். பின்பு எப்போது இறந்தார் என்றால் சுமார் இரண்டு, மூன்று மாதங்களில் இறந்தார். பஞ்சாயத்து பேசப்பட்ட போது சின்னசாமி என்ன கூறினார் என்றால் எனது மகளுக்கு நான் எழுதி வைத்து விட்டேன் என்று கூறினார். அதற்கு சண்முகம் என்ன கூறினார் என்றால் எனக்கு உரிமை உள்ளது அந்த நிலத்தில் நான் வழி செல்ல வேண்டும் என்று கூறினார். பஞ்சாயத்தில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் சரியான முடிவு எதுவும் செய்யப்படவில்லை. அவ்வாறு பேசப்பட்ட போது கல்பனா மீனாட்சி ஆகியோர்

வந்தாரா என்றால் இல்லை. சின்னசாமி பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்பே வரதம்மாளுக்கு பாக பத்திரம் ஏற்படுத்தி விட்டார் பாக பத்திரம் ஏற்படுத்தும் போது சண்முகத்திற்கு அந்த விவரம் நன்கு தெரியும் அது தெரிந்தும் அந்த சொத்தை ஏமாற்ற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் அதற்கு நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிவு நேரம் – 12.45 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXX

District Munsif(FAC),
Uthangarai.